கழக இளைஞர் அணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை கழக மீனவர் அணி செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

தமிழகத்தில் 10 மாவட்டங்களில் மழை

சென்னை, அக்.9- தமிழகத்தின் 10 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு என வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: லட்சத்தீவு, கேரளா மற்றும் வடதமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோயம்புத்தூர், திருப்பூர், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

நெல்லை கிழக்கு மாவட்ட கழக அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார். நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், ஞானதிரவியம், சித்திக், மாவட்டப் பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாவட்ட துணைச் செயலாளர்கள் மைக்கேல், நம்பி, தமயந்தி,மாநில அணி நிர்வாகிகள் ஆவின் ஆறுமுகம், கணேஷ்குமார் ஆதித்தன், ஏரிக்ஜு உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

அருந்ததியர் சமுதாயத்திற்கு 3 சதவீத உள் ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டதற்கு

முதல்வர் - துணை முதலமைச்சருக்கு பாராட்டு விழா!

நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது!

நெல்லை, அக்.9- அருந்ததியர் சமுதாயத்திற்கு 3 சதவீத உள் இட ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டதற்கு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கும்,துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் பாராட்டு விழா நெல்லை டவுண் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதி சார்பில் நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் பகுதி செயலாளர் நமச்சிவாயம் (நெல்லை)மாநகர துணைச் செயலாளர் அப்துல் கையூம்,

பகுதி செயலாளர் அன்டன் செல்லத்துரை(பாளை) 27 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் உலகநாதன், வட்டச் செயலாளர்கள் கதிரேசன்,மாரிமுத்து, காஜா மைதீன், சடாமுனி, லெனின், மாநகர தொழிலாளர் அணி அமைப்பாளர் பெப்சி சரவணன்,வட்ட நிர்வாகிகள் நாதன்,சங்கர நாராயணன், உலகநாதன்,ராமசாம, குமார், இளைஞர் அணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான், இனியன்,தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் மணி, அமைப்பு சாரா ஓட்டுநரணி துணை அமைப்பாளர் டைட்டஸ் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

“சமூகநீதி என்ற சொல்லுக்கு சொந்தக்காரர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தான்”

பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக தொடர்ந்து போராடி வந்தார்.முத்தமிழ் அறிஞர் கலைஞரின் தலைமையில் 2009ஆம் ஆண்டு தி.மு.க ஆட்சி நடைபெறும் போது பட்டியலின பிரிவுகளில் மிகவும் பின் தங்கியுள்ள இட ஒதுக்கீட்டின் பயனை அடையாத மக்களான அருந்ததியர் மக்களுக்கு, கம்யூனிஸ்ட் கட்சிகளின் கோரிக்கையை செவி கொடுத்து கேட்டு உள் ஒதுக்கீட்டை நிறைவேற்ற சில தலித் தலைவர்களின் எதிர்ப்பையும் புரிந்து கொண்டு உள் ஒதுக்கீட்டை நடைமுறை படுத்துவதில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் உறுதியாக இருந்தார்கள்.

அரசியல் சட்ட நிபுணர்களுடன் ஆலோசித்து ஓய்வு பெற்ற நீதிபதி ஜனார்த்தனன் கமிசனை நியமித்து மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தி அனைத்து கட்சி கூட்டம் நடத்தி எதிர்த்த சில தலித்தலைவர்களையும் ஒருங்கிணைந்து,அனைத்து கட்சி கூட்டத்தில் அனைத்து தலைவர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து அருந்ததியர் மக்களுக்கான 3 சதவீத இட ஒதுக்கீடை நடைமுறைப்படுத்தி னார்.

அதன் அடிப்படையில் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கும்,துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் நிகழ்வு நெல்லை டவுண் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாடு வாரிய குடி யிருப்பு பகுதி மக்கள் சார்பில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்வில் மாவட்ட பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ், தச்சை பகுதி துணை செயலாளர் ஸ்டார் முருகன், மாவட்ட வர்த்தக அணி தலைவர் அவதார் ஷாஜகான்,மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் ஸ்டார் அப்துல்,மாநகர பிரதிநிதி சிவா,மாநகர வர்த்தக அணி அமைப்பாளர் மகாராஜன்,அயலக அணி துணை அமைப்பாளர் கணேச பெருமாள்,மாநகர அணி நிர்வாகிகள் ஜான் கென்னடி,ஷெட்டி, சார்லஸ் முத்து ராஜ்,வின் சென்ட் வினோத், சௌந்திரம், ஆனி ராக்லேண்ட், முத்து சுப்பிரமணியன், வைரமணி,சிவகுமார், சங்கர் கணேஷ்,சுடலைகண்ணு, ஹாமிம் முஸ்தபா உள்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை 27 வது வட்ட செயலாளர் கேபிள் குமரேசன் செய்திருந்தார்.

நெல்லை டவுன் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதியில் அருந்ததியர் சமுதாயத்தின் சார்பில் 3 சதவீதம் உள் இட ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டதற்கு முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் – கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், பாராட்டு விழா நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. உடன் நமச்சிவாயம்,உலகநாதன், அன்டன் செல்லதுரை, அப்துல் கையூம், கதிரேசன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கழகத்தினர்

வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிகளில் தீவிரமாக ஈடுபடுவீர்!

மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் அறிக்கை!

இராமநாதபுரம் , அக்.9- இராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., அறிக்கை வருமாறு:

கழக தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, இந்திய தேர்தல் ஆணையம் 01.01.2025 தேதியை தகுதி யேற்படுத்தும் நாளாகக் கொண்டு சிறப்பு சுருக்க திருத்தம் 2025இன் கீழ் வாக்காளர் பட்டியல் தயாரிக்க ஏதுவாக இராமநாதபுரம் மாவட்டத்தில் 29.10.2024 அன்று புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட உள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம்,முகவரி மாற்றம் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர

- 09.11.2024 (5),
- 10.11.2024 (ஞாயிற்றுக் கிழமை)

23.11.2024(சனிக்கிழமை),

- 24.11.2024 (ஞாயிற்றுக் கிழமை) ஆகிய நான்கு நாட்களில் சிறப்பு முகாம்கள் நடைபெறுகின்றது. இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும். 01.01.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும். இதன் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும்: தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள். ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட கழக முன்னோடிகள், கழக தோழர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஒன்றிய, நகர, பேரூர் கழக எல்லைக்கு உட்பட்ட வாக்கு சாவடி மையங்களில் மேற்கொள்ளப்பட்ட சேர்க்கை, நீக்கம், திருத்தம் தொடர்பான விவரங்களை மாவட்டக் கழகத்தில் ஒப்படைத்திட வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA-2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) இந்த பணியில் முழுமையாக ஈடுபட்டு 2026 சட்டமன்ற தேர்தல் வரை தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

கழக முப்பெரும் விழா! வே.வாசு தலைமையில்

10 கருணை இல்லங்களுக்கு ஒரு மாதத்திற்குத் தேவையான மளிகைப் பொருட்கள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

சென்னை, அக்.9- பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி செயலாளர் வே.வாசு - தலைமையில் 10 கருணை இல்லங்களுக்கு ஒரு மாதத்திற்கு தேவையான மளிகைப்பொருட்கள், மருந்து, மாத்திரைகள், பீரோ, தையல் இயந்திரம், மாற்றுத் திறனாளி சைக்கிள், குக்கர் போன்ற அத்தியாவசிய பொருட்களை தமிழ்வளர்ச்சி (ம) செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்.

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்கு பகுதி தி.மு.க சார்பில் பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவின், திராவிடத் தொடர்12வது நிகழ்ச்சியாக “ஒருவருக்கொருவர்துணையாவோம்! உங்களில் ஒருவராய் உயிராவோம்! என்ற தலைப்பில் 10 கருணை இல்லங்களுக்கு தேவையான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 07.10.2024, திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில், சென்னை23, அயன்புரம், மேட்டுத்தெரு, வன்னியர் குலசத்தியர்திருமணமண்டபத்தில் சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், வில்லிவாக்கம் கிழக்கு பகுதி செயலாளர் வே.வாசு தலைமையில் 10 கருணை இல்லங்களுக்கு ஒரு மாதத்திற்கு தேவையான மளிகைப்பொருட்கள், மருந்து, மாத்திரைகள், பீரோ, தையல் இயந்திரம், மாற்றுத்திறனாளி சைக்கிள், குக்கர் போன்ற அத்தியாவசிய பொருட்களை தமிழ்வளர்ச்சி (ம) செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கி மகிழ்ந்தார்.

இந்நலத்திட்டவிழாவில் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்.ப.ரங்கநாதன், கூ.பி.ஜெயின் எம்.சி, டி.வி. செம்மொழி எம்.சி, சாவித்திரி ஸ்ரீவீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வான வில்விஜய், ஜி.ஜெ.பிரபு, லதாவாசு எம்.சி, எம். சுரேஷ், புரசை டி.சம்பத், டி.தாமோதரன், டபள்யூ. அமுல், நா.அறிவுடைநம்பி, விக்னேஷ் சீனிவாசன், ச.மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி செ.துரை,ம.ஜெகதீஸ்வரன், வில்லிவாக்கம் கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தத்துவமேதை டி.கே.சீனிவாசன்

35வது ஆண்டு நினைவு வணக்கம்

தோற்றம் 14.11.1922

மறைவு 9.10.1989

என்றும் தங்கள் வழி நடக்கும்

டி.கே.எஸ்.இளங்கோவன், Ex. M.P., நளினி
(செய்தி தொடர்பு குழு தலைவர், தி.மு.க.)
டி.கே.எஸ்.மணிவண்ணன் குணபூஷணி
டி.கே.எஸ்.தமிழ்ச்செல்வி எஸ்.தமிழ்மணி
திருமதி கீதாலட்சுமி வில்லாளன்
திருமதி. மாதவி – ஜான் விஜய்,
திருமதி. இ.தரணி – எஸ்.ராகவேந்திரமூர்த்தி,
சீனிவாசன், மேகலா, பரிதி ஈசா,

11 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 18.09.1937

மறைவு 09.10.2013

சேப்பாக்கம் க.சந்தானகிருஷ்ணன்

(முன்னாள் தலைமை பொதுக்குழு உறுப்பினர் & 48 ஆண்டுகள் வட்ட கழக செயலாளர்)

எங்கள் உயிரில் கலந்த உங்கள் நினைவுகளோடு...

தலைவர் தளபதி அவர்களின் வழியில் திராவிடத்தின் விழுதுகளாய்...

மகன்கள் : ச.அம்மையப்பன் ச.ராஜேந்திரன்
ச.கலைச்செல்வன் ச.மதிவாணன் ச.கரிகாலன்

மகள், மருமகன் : ச.ரதி க.ராஜசேகர்

மருமகள்கள் புவனேஸ்வரி அம்மையப்பன் புவனேஸ்வரி ராஜேந்திரன்
தனலட்சுமி கலைச்செல்வன் சுதா மதிவாணன் ஷர்மிளா கரிகாலன்

பெயரன்கள் கலாநிதி ராஜா அம்மையப்பன் நிரஞ்சன் ராஜசேகர் அஷ்வின் ராஜேந்திரன் ராகவ் ராதாகிருஷ்ணன் கரிகாலன்

பெயர்த்திகள் ஷாலினி அம்மையப்பன் காவ்யா மதிவாணன் அக்ஷயா மதிவாணன்

ராதா சந்தானகிருஷ்ணன் நினைவு அறக்கட்டளை, சென்னை